18th July 1962]

Caterpillars (aerial spray in Salem district)

* 379 Q.—Sri N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to extend the aerial spray to eradicate " Caterpillars " in Salem district?

The Hon. Sri P. KAKKAN : No, Sir.

திண்டிவனம் திடங்கல் ஏரி (மராமத்து செய்தல்)

* 380 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் திடங்கல் ஏரி மராமத்து செய்து எத்தனை ஆண்டுகளாயின ?

(இ) மராமத்து செய்யவேண்டுமென்று விவசாயிகளிடமிருந்து மகஜர் வந்திருக்கிறதா ?

(உ) அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

The Hon. Sri V. RAMAIAH : (a) Repairs to Gidangal Tank were last carried out in 1961–62.

(b) Yes, Sir.

(c) Necessary e timates for repairs to tank bund, etc., are under preparation and the works will be carried out shortly.

திரு. ஆ. தங்கவேலு: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் 'கிடங்கல் ஏரி' என்பது அச்சுப் பிழையாக 'திடங்கல் ஏரி' என்று இருக்கிறது, அதைத் திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். 1962-63-ல் அதை முடித்துக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் எந்த ஏரியைக் குறித்து கேட்டார்களோ அதைப் புரிந்து கொண்டு பதில் கொடுத்திருக்கிறேன். இப்போது நடக்கும் வேலைகள் வருஷா வருஷம் தொடர்ந்து நடக்கக்கூடிய வேலைகள். 1962-63-ல் வேலை முடிந்துவிடும், பூர்த்தியாகிவிடும் என்று சொல்ல முடியாது. விவசாயிகளுக்குப் பயன்படும் முறையில் அரசாங்கம் எல்லா வேலைகளையும் தொடர்ந்து செய்துவரும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: பொதுமக்களால் புகார் செய்யப்பட்ட பிறகு இந்த எஸ்ட்டிமேட் தயார் ஆனதா ? அல்லது அதற்கு முன் தயார் ஆனதா ?

கனம் திரு. வி. ராமையா : என்னுடைய தகவல் இந்த வேலைகளை அதிகாரிகள் பார்த்துக்கொண்டு, பரிசீலனை செய்து கொண்டிருக்கும் நேரத்தில் தாங்களும் கோரிக்கை போட்டதாக இருக்க வேண்டும் என்று நினைத்து கோரிக்கையாக ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த மகஜரும் சம்பந்தப்பட்ட வேலைகளைச் சுட்டிக் காட்டும் மகஜராக இருக்கிறது.